கொளத்தூர் தொகுதியில் நான்காண்டு சாதனைகளை விளக்கி

# அரிய புகைப்படங்கள் அடங்கிய கண்காட்சி!

பொதுமக்களுடன் அமைச்சர்கள் எ.வ.வேலு - பி.கே.சேகர்பாபு பார்வையிட்டனர்!






**சென்னை, மே.19-**

**திராவிடமாடல் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் நான்காண்டு சாதனைகளை விளக்குகின்ற வகையில் ஒரு மாபெரும் புகைப்பட கண்காட்சியினை தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

திராவிட மாடல் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையில் நடைபெற்று வருகின்ற நான்காண்டு சாதனைகளை விளக்குகின்ற வகையில் தலைமை கழகத்தால் அறிவிக்கப்பட்ட பகுதிக்கு ஒரு கூட்டம் என்கின்ற வகையில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட 13 பகுதிகளிலும் சிறப்பான முறையில் தலைமை கழகத்தால் அறிவிக்கப்பட்ட பேச்சாளர்களை கொண்டு சிறப்பாக நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து திராவிட மாடல் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கொளத்தூர் சட்டமன்ற தொகுதியில் நான்காண்டு சாதனைகளை விளக்கு கின்ற வகையில் ஒரு மாபெரும் புகைப்பட கண்காட்சியினை தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த சிறப்பு வாய்ந்த புகைப்பட கண்காட்சியில் நூற்றுக் கணக்கான புகைப்படங்களும் முப்பரிமாணத் தொழில்நுட்பத்தின் மூலமாக சாதனைகளை விளக்குகின்ற வகையில் தயாரிக்கப்பட்ட திரையிசை பாடல் காட்சிகள் ஹோலோகிராம் தொழில்நுட்பத்தின் மூலமாக தயாரிக்கப்பட்டு இருந்த தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மற்றும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசுகின்ற வகையில் தயாரிக்கப்பட்டு இருந்த ஒலி ஒளி காட்சிகளும் இடம் பெற்றுள்ளன.

இப்புகைப்படக் கண்காட்சியை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று (18.05.2025) பார்வையிட்டு மகிழ்ந்தார்.



# தி.மு.க. இளைஞர் அணி

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

### ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

தஞ்சாவூர் வடக்கு, புதுக்கோட்டை வடக்கு & தெற்கு, நாகப்பட்டினம் மற்றும் தஞ்சாவூர் தெற்கு மாவட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 22.05.2025 வியாழக்கிழமை | காலை 10.00 மணி | தஞ்சாவூர் வடக்கு | ரயாஸ் கிராண்ட் ஹோட்டல், மகாமகம் குளம் எதிரில், கும்பகோணம். |
| 24.05.2025 சனிக்கிழமை | காலை 10.00 மணி | புதுக்கோட்டை வடக்கு & தெற்கு | கற்பகவிநாயகா திருமண மண்டபம், மாலையீடு, புதுக்கோட்டை. |
| 26.05.2025 திங்கள்கிழமை | காலை 10.00 மணி | நாகப்பட்டினம் | தளபதி அறிவாலயம், நாகப்பட்டினம். |
| 27.05.2025 செவ்வாய்க்கிழமை | காலை 10.00 மணி | தஞ்சாவூர் தெற்கு | ஏஏஏ பேலஸ், பேருந்து நிலையம் அருகில், பட்டுக்கோட்டை. |

### சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி!

பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 1–இல் கீழ்க்கண்ட 6 சட்டமன்றத் தொகுதியில் நடைபெறும் சமூக வலைத்தளப் பயிற்சி குறித்த விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|
| 19.05.2025 திங்கள்கிழமை | மாலை 4.00 மணி | விருகம்பாக்கம் | கோல்டன் பேரடைஸ் திருமண மண்டபம், சாலிகிராமம், சென்னை–93. |
| 20.05.2025 செவ்வாய்க்கிகிழமை | மாலை 4.00 மணி | மதுரவாயல் | ஸ்ரீ ராஜலட்சுமி மகால், 4, பிள்ளையார் கோயில் தெரு, ஆற்காடு சாலை, கணபதி நகர், போரூர், சென்னை–116. |
| | மாலை 4.00 மணி | அம்பத்தூர் | கே.எஸ்.பி. மகால், 12, காமராஜர் சாலை, கோபால் நாயக்கர் நகர், பாடி, சென்னை–50. |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 15-05-2025

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் – சென்னை மாநகராட்சி சார்பில் மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை!

# திரு.வி.க. நகர் தொகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள்!

## ப.தாயகம் கவி எம்.எல்.ஏ. எடுத்துரைத்து உரையாற்றினார்!

சென்னை, மே 17 -

சென்னை மாநகராட்சி சார்பில் 14.05.2025 மாலை 5 மணிக்கு ரிப்பன் மாளிகை 2வது தளத்தில் கூட்டரங்கில், சென்னை மாநகராட்சி ஆணையர் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. இதில் மாநகராட்சி மேயர், பிரியா ராஜன், மாநகராட்சி துணை மேயர் மகேஷ் குமார் முன்னிலை வகித்தனர். இக்கூட்டத்தில் சென்னை மாவட்ட அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள், அனைத்து மாநகராட்சி துணை ஆணையர்கள், அனைத்து மண்டல மண்டல அலுவலர்கள், சென்னை மாநகராட்சிக் குட்பட்ட சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியத் துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கை தொடர்பாகவும், கடந்த 24.10.2024 அன்று நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் தலைமையில் அம்மா மாளிகையில் நடைபெற்ற அனைத்து மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களது தொகுதிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக பட்டியல் வழங்கப்பட்டது.

அதில், திரு.வி.க சட்டமன்ற உறுப்பினர் திரு. தாயகம் கவி வார்டு எண் 71ல் நெல்வயல் சாலை, பெரம்பூர் நெடுஞ்சாலை தெற்கு, வார்டு 72ல் வெங்கடேசபுரம் நியூ காலனி பிரதான சாலை, தாஸ் நகர் மெயின் ரோடு, வார்டு 73ல் இராமசாமி தெரு, நாச்சாரம்மாள் தெரு, வார்டு 74ல் கிருஷ்ணதாஸ் சாலை, சந்திரயோகி சமாதி சாலை, நேரு ஜோதி நகர், கொன்னூர் நெடுஞ்சாலை, வார்டு 75ல் மேடவாக்கம் குளக்கரை சாலை ஆகிய இடங்கிளில் பழைய பழதடைந்த நிலையில் உள்ள மழைநீர் வடிகால் கால்வாய்களை இடித்து அப்புறப்படுத்தி, புதிதாக மழைநீர் வடிகால் கால்வாய் களை அமைக்கவும்,

கடந்த மழையில் கால்வாய் கட்டப்பட்டும், இரண்டு நாட்கள் மழை நீர் நின்ற இடங்களான வார்டு 72ல் தாஸ் நகர் 7வது மற்றும் 8வது தெரு, வார்டு 74ல் கிருஷ்ணதாஸ் சாலை, சந்திர யோகி சமாதி சாலை, நேரு ஜோதி நகர், கொன்னூர் நெடுஞ்சாலை, வார்டு 76ல் அங்காளம்மன் கோவில் தெரு, கே.எம் கார்டன், நியூ பெரான்ஸ் சாலை ஆகிய பகுதிகளை சீரமைக்கவும், காந்தி கால்வாயின் பக்கசுவர் மற்றும் அடிதளம் ஆகியவற்றை சீரமைக்கவும் கோரிக்கை விடுத்தார்.

இது தொடர்பாக சம்மந்தப்பட்ட அதிகாரிகள் துறை ரீதியாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரங்கள் பின்வருமாறு.

வார்டு 72ல் உள்ள பிரதான சாலையான வெங்கடேசபுரம் நியூ காலனி மெயின் ரோடு, தாஸ் நகர் பிரதான சாலை மற்றும் கன்னிகாபுரம் விளையாட்டு மைதானம் உட்பகுதியில் வார்டு 73ல் இராமசாமி தெரு, நாச்சாரம்மாள் சந்து ஆகிய தெருக்களில் புதிய மழை நீர்வடிகால்வாய் மற்றும் பழைய மழை நீர்வடி கால்வாய் இடித்துக் கட்டும் பணிக்கு ரூ. 476. இலட்ச மதிப்பீட்டிற்கு 06.05.2025 அன்று ஒப்பம் கோரப்பட்டுள்ளது என்றும், வார்டு 71 மற்றும் 73ல் நெல்வயல் ரோடு, வீராசாமி தெரு ஆகிய தெருக்களில் மழைநீர் வடிகால்வாய் இடித்து கட்டும் பணிக்கு ரூ.402.30 இலட்சங்களுக்கு ஒப்பம் கோரப்பட்டுள்ளது என்றும், பெரம்பூர் நெடுஞ்சாலை (தெற்கு) இடித்து கட்டும் பணிக்கு ரூ.459.36 இலட்சத்திற்கு ஒப்பம் கோரப்பட்டுள்ளது எள்றும், மேலும் வார்டு எண் 75ல் மேடவாக்கம் குளக்கரை சாலையில் ரூ.340.15 இலட்சம் மற்றும் ரூ.234.91 இலட்சத்திற்கு கால்வாயை இடித்து கட்டும் பணிக்கு ஒப்பம் கோரப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மழைநீர் வடிகால்வாய்களில் உடன் தூர் வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் ஒரு மூடிக்கும் அடுத்த மூடிக்கும் இடையில் உள்ள அடைப்புகள் மற்றும் சில்ட்கள் முழுமையாக மழைக்கு முன்னதாக அகற்றப்பட வேண்டும் என்ற சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி கோரிக்கை விடுத்ததற்கு, ஒவ்வொரு வருடமும் வடகிழக்கு பருவ மழைகாலம் மற்றும் தென் மேற்கு பருவ மழை காலங்களுக்கு முன்கூட்டியே திட்டமிட்டு ஒவ்வொரு வார்டிலும் உள்ள மழைநீர் கால்வாய்களில் தூர்வார அந்தந்த வார்டு பொறியாளர் மூலம் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, ஒப்பம் கோரப்பட்டு பணி மேற்கொள்ளப்படும் நடைமுறையில் உள்ளது என்றும் காந்தி கால்வாயில் பக்கசுவர் மற்றும் அடித்தளம் அமைக்க ரூ.3.00 கோடி மதிப்பில் பணி மேற்கொள்ள 05.05.2025 அன்று பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது என்றும் துறை அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.

மழையின்போது பாதிக்கப்பட்ட மக்கள் தங்க வைக்கப்படும் Relief Centres அந்தந்த வார்டிலேயே இருக்கும்படி அமைக்கப்பட வேண்டும் என்ற திரு.வி.க நகர் சட்டமன்ற உறுப்பினர் தி தாயகம் கவி கோரிக்கைக்கு, மழைக் காலங்களில் பாதிக்கப்பட்ட மக்களை தங்க வைக்க அந்தந்த வார்டுகளில் சமுதாய நலக் கூடங்கள் மற்றும் பள்ளிக் கூடங்கள் தற்காலிக நிவாரண மையமாக பயன்படுத்தப்படும் என்றும், திரு.வி.க நகர் தொகுதியில் 9 சமுதாய நலக்கூடங்களும் 16 பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளும், மற்றும் ஆதி திராவிடர் பள்ளிகளும் நடைமுறையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது.





காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், மதுராந்தகம் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் நாடு போற்றும் நான்காண்டு, தொடரட்டும் பல்லாண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் புக்கத்துறை கிராமத்தில் ஒன்றிய செயலாளர் பி.எச்.சத்தியசாய் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார். உடன் தலைமைக் கழகப் பேச்சாளர் பாரதி மோகன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் செம்பருத்தி துர்கேஷ், ஒன்றிய நிர்வாகிகள் ஆறுமுகம், தனசேகரன், தமிழரசன், திருஞான செல்வம், தேவராஜ், பார்த்தசாரதி, சுந்தரவரதன், மணியன், கிளை நிர்வாகிகள் அன்பழகன், மாரிமுத்து, மணிவண்ணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பங்கேற்பு!

# காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம், வருகிற 21.05.2025 - புதன்கிழமை மாலை 4 மணியளவில் வாலாஜாபாத் - காஞ்சிபுரம் சாலையில் உள்ள அறம்வளர்த்த நாயகி திருமண மண்டபத்தில் மாவட்ட கழக அவைத்தலைவர் ச.இனியரசு, தலைமையிலும் மாவட்ட துணை செயலாளர்கள் டி.வி.கோகுலகண்ணன், க.செல்வம் எம்.பி., கு.மலர்விழி, மாவட்டப் பொருளாளர் சன்பிராண்ட் கே.ஆறுமுகம் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கலந்து கொண்டு 2026 சட்டமன்றத் தேர்தல் பணி சம்மந்தமாக ஆலோசனை வழங்க உள்ளார். சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள், சூர்யா வெற்றிகொண்டான் (உத்திர மேரூர்) அருண்குமார். (காஞ்சிபுரம்) எம்.டி.ஆர்.சாரதி மணிமாறன், (மதுராந்தகம்) எஸ்.டி.இசை (செய்யூர்) ஆகியோர் கலந்துகொள்கிறார்கள்.

எனவே, இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர - நகர - ஒன்றிய - பகுதி - பேரூர் செயலாளர்கள், மாநில, மாவட்ட, கழக அணிகளின் நிர்வாகிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 1. 2026 சட்டமன்றத் தேர்தல் பணிகள், 2. கழக ஆக்கப்பணிகள்.

**க.சுந்தர் எம்.எல்.ஏ.**
செயலாளர், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.





திருத்தணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கோரமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த மேகலா 10ஆம் வகுப்பு மாணவி தேர்வில் 500க்கு 497 மதிப்பெண்கள் பெற்று மாநில அளவில் மூன்றாவது இடமும் மாவட்ட அளவில் முதலிடம் பெற்றதற்கும் அத்திமாஞ்சேரி அரசு மேல் நிலையில் படித்த மணிமாறன் என்கின்ற மாணவன் 500க்கு 495 மதிப்பெண் மற்றும் எம்.யு. செல்வஸ்ரீ என்கின்ற மாணவி 500க்கு 494 மதிப்பெண்களை பெற்றதற்காக மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ மாணவ மாணவிகள் இல்லத்திற்கு நேரில் சென்று பொன்னாடை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார். உடன் ஒன்றிய கழக செயலாளர்கள் என்.கிருஷ்ணன், பி.டி.சந்திரன், சாம் சுந்தர் உள்பட பலர் உள்ளனர்